நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No. 295/2020

## P.W.7 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | Dr.ராதாகிருஷ்ணன் |
| தந்தை / கணவர் பெயர் | : | மகாலிங்கம் |
| கிராமம் | : | மேச்சேரி |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW7** |
| வயது | : | 44 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், மார்ச் மாதம், 27–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.20 PM

1. நான் தற்போது குடிமை மருத்துவராக மேட்டுர் அரசு தலைமை மருத்துவமனையில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.10.2019 ம் தேதி பணி மருத்துவராக இருந்தபோது மதியம் 01.10 மணியளவில் உயிரற்ற நிலையில் அற்புதமேரி என்பவரை அவரது உறவினரான சுப்ரமணி என்பவர் சிகிச்சைக்காக

சேர்த்தார்.

2. அவரை பரிசோதித்தபோது அவர் உயிரற்ற நிலையிலும் இதயதுடிப்பு, நாடிதுடிப்பு அனைத்தும் செயலற்ற நிலையில் காணப்பட்டது. அவரது இறப்பு சுமார் 01.15 மணியளவில் உறுதிசெய்யப்பட்டது. அவர் கட்டத்தொழில் செய்யும் இடத்தில் கட்டிட சுவர் மேலே இடிந்து விழுந்ததாக சுப்ரமணி என்பவர் கூறினார்.

3. அவரது உடலை மேட்டுர் அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனை அறையில் வைக்கப்பட்டது. போலீசார் இதுசம்மந்தமாக என்னை விசாரித்தனர். நான் தயார் செய்த **விபத்து பதிவேட்டு அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**

4. மேலும் இதே வழக்கில் காயம்பட்ட பிரான்சிஸ் என்பவரை சுப்ரமணி என்பவர் சிகிச்சைக்காக மதியம் 01.30 மணிக்கு அழைத்து வந்தார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் இடது முட்டியில் இரத்தக்கட்டு சுமார் 10 x 5 x 2 cm அளவில் காணப்பட்டது. மேலும் அவரது முதுகு வலியும் இருந்ததாக கூறினார். அவருக்கு ஏற்பட்ட காயத்திற்கு முதலுதவி சிகிச்சை செய்யப்ட்டு மேல்சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பட்டார். **( பிரான்சிஸ் என்பவரின் விபத்து பதிவேட்டு அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. 108 ஆம்புலன்ஸ் மூலம் மேற்படி இறந்துபோன நபர் மதியம் 01.10 மணிக்கு இறந்த நிலையில் கொண்டுவரப்பட்டார். இந்த வழக்கில் இறந்துபோன அற்புதமேரி மற்றும் காயம்பட்ட பிரான்சிஸ் ஆகியோரை 108 ஆம்புலன்ஸ் மூலம் சுப்ரமணி என்பவர்தான் அழைத்து வந்தார் என்றால் சரிதான். இருவரும் ஒரே ஆம்புலன்சில் வந்திருக்க வாய்ப்பில்லை. வழக்கமாக ஒரே ஆம்புலன்சில் இரு நபர்களை எடுத்து வரமாட்டார்கள்.

2. மேற்படி இருவரும் ஒருவர் பின் ஒருவராக மருத்துவமனைக்கு எடுத்துவரப்பட்டிருக்கவும் அதில் உறவினரை பற்றி விசாரித்தபோது இருவருக்கும் ஒரே நபர் நான்தான் உறவினர் என்று சொல்லியிருக்கலாம்.

இறந்துபோன நபரான அற்புதமேரி என்பவர் மீது மண்துகள்கள் ஏதாவது ஒட்டியிருந்ததா என்றால் அதுப்பற்றி நான் விபத்து பதிவேட்டு அறிக்கையில் குறிப்பிடவில்லை.

3. காயம்பட்ட பிரான்சிஸ் என்பவருக்கும் உடம்பில் மண்துகள்கள் ஒட்டியிருந்ததாக நான் குறிப்பிடவில்லை. கட்டிடவேலை செய்யும் இடத்தில் உயரத்தில் இருந்து விழுந்தால்கூட மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் உள்ளது. நான் முதலுதவி சிகிச்சை மட்டும் அளித்தேன். உள்நோயாளியாக பிரான்சிஸ் அனுமதிக்கப்படவில்லை.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 12.35 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**